(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 5(8).]

# பாராளுமன்றம்

## 5 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2012 ஏப்பிறல் 04, புதன்கிழமை வெளியிடப்பட்டது

## 2012 மே 22, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1621/'11

கௌரவ அனுர திஸாநாயக்க,— சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(3)

(அ) (i) மிஹின் லங்கா நிறுவனத்தின் தற்போதைய உயர்மட்ட உத்தியோகத்தர் சபையிலும் பணிப்பாளர் சபையிலும் பணியாற்றுபவர்கள் யாவர்;

(ii) மேற்படி ஒவ்வொரு உத்தியோகத்தரினதும், பணிப்பாளர் சபை உறுப்பினரதும் கல்வி மற்றும் தொழில் தகைமைகள் யாவை;

(iii) மேற்படி உத்தியோகத்தர்களுக்கும் பணிப்பாளர் சபை உறுப்பினர்களுக்கும் வழங்கப்படும் சம்பள அளவுகள், ஏனைய கொடுப்பனவுகள் மற்றும் சிறப்புரிமைகள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மிஹின் லங்கா நிறுவனத்தின் 2010ஆம் ஆண்டுக்கான ஐந்தொகையின் பிரகாரம் ரூபா 5.6 பில்லியன் சொத்துக்கள் நிலுவை காணப்படுகின்றதா;

(ii) அவ்வாறாயின், அதில் தாக்கம் செலுத்திய காரணிகள் யாவை

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2000/ '11

கௌரவ அஜித் பி. பெரேரா,— பிரதம அமைச்சரும் புத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) நிமல் புஞ்சிஹேவா என்பவர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் பதவியொன்று வகிப்பதை ஆரம்பித்த திகதி யாதென்பதையும்

(ii) இவர் பிறந்த திகதி யாதென்பதையும்;

(iii) மேற்படி நபர் 60 வயதைத் தாண்டிய பின்னரும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் சேவையாற்றுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனின், அது எப்போது என்பதையும்;

(v) இவ்வாறான அங்கீகாரம் வழங்கப்படவில்லையெனின் 60 வயதை தாண்டிய திகதி தொடக்கம் இன்று வரை மேற்படி நபர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் சட்டத்திற்கு முரணான விதத்திலேயே சேவையாற்றியுள்ளார் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(vi) ஆமெனின், மேற்படி நபர் தொடர்பில் எடுக்கப்படும் எதிர்கால நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2017/ '11

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— நிர்மாணத்துறை,பொறியியல் சேவைகள் வீடமைப்பு ,பொதுவசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) புனித பிரதேசங்களுக்கருகில் அனுமதியின்றி வசிக்கும் குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகளை நிர்மாணித்துக் கொடுக்கின்ற கருத்திட்டமொன்று நடமுறையில் உள்ளதா;

(ii) ஆமெனில், எந்த புனித பிரதேசங்களை மையமாகக் கொண்டு மேற்படி கருத்திட்டம் நடமுறைப்படுத்தப்படுகின்றது

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2031/ '11

கௌரவ சஜித் பிரேமதாச,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) பல்வேறு சர்வதேச பல்கலைக்கழகங்களின் இணைந்த நிறுவனங்களாக வெளிக்காட்டிக்கொண்டு குறித்த பல்கலைக்கழகங்களின் பெயரின் கீழ் இயங்கி வரும் அநேகமான தனியார் கல்வி நிறுவனங்கள் தற்போது இலங்கையில் காணப்படுகின்றன என்பதையும்;

(ii) அரச பல்கலைக்கழகங்களுக்கான அனுமதியை இழந்த பெரும் எண்ணிக்கையான மாணவர்கள் மேற்படி கல்வி நிறுவனங்களில் அனுமதியைப் பெறுவதற்கு முயற்சி செய்கிறார்கள் என்பதையும்;

(iii) இவர்களில் வசதியில்லாத சாதாரண குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளும் இருக்கின்றார்கள் என்பதையும்;

(iv) மேற்படி ஒருசில கல்வி நிறுவனங்கள் வெறுமனே பணம் சம்பாதிக்கும் நோக்கத்துடன் மாத்திரம் நடாத்தப்படுகின்றன என்பதையும்;

(v) ஒருசில கல்வி நிறுவனங்கள் எந்தவோர் அங்கீகாரமும் இல்லாத சான்றிதழ்களை வழங்கியுள்ளன என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) இலங்கையில் தற்போது பல்வேறு சர்வதேச பல்கலைக்கழகங்களின் பெயர்களின் கீழ் இயங்கி வரும் தனியார் கல்வி நிறுவனங்கள் தொடர்பான தொகைமதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், அத்தகைய நிறுவனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) அவ்வாறான கல்வி நிறுவனங்களை பேணிவருவதற்குத் தேவையான பண்பையும் தரத்தையும் பரிசீலித்து முறைசார்ந்த பதிவொன்றைப் பெற்றுக்கொள்வதை கட்டாயமாக்கும் வேலைத்திட்டமொன்றைத் தயாரிக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2109/ '11

கௌரவ ஜோன் அமரதுங்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கலதாரி ஹோட்டல் லங்கா பிஎல்சி, லாப்ஸ்கேஸ் (Laugh Gas) பிஎல்சி மற்றும் சிலோன் கிரைன் எலிவேடர்ஸ் ((Ceylon Grain Elevators) ஆகியவற்றில் ஊழியர் சேமலாப நிதியம் கொண்டுள்ள பங்குகளின் எண்ணிக்கையையும்;

(ii) பங்குகளின் தொகுதி ஒவ்வொன்றும் கொள்வனவு செய்யப்பட்ட திகதிகளையும்;

(iii) மேற்குறிப்பிட்ட பங்குகள் கொள்வனவு செய்யப்பட்ட விலை யாதென்பதையும்;

(iv) பங்குகள் யாரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டன என்பதையும்;

(v) பங்குகள் பின்னர் விற்பனை செய்யப்பட்டிருப்பின், விற்கப்பட்ட நபர்களின் பெயர்களை பங்குத் தொகுதி அடிப்படையிலும்;

(vi) மேற்குறிப்பிடப்பட்ட பங்குகளின் ஒவ்வொரு தொகுதியும் விற்கப்பட்ட விலையையும்;

(vii) இக்கொடுக்கல் வாங்கல்களில் சம்பந்தப்பட்ட தரகர்களின் பெயர்களையும்

அவர் இச்சபைக்கு வெவ்வேறாக அறியத்தருவாரா?

(ஆ) இன்றேல், என்?

2156/ '11

கௌரவ ரீ. ரன்ஜித் த சொய்சா,— அரச வளங்கள், தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இரத்தினபுரி மாவட்டத்தின் பலாங்கொடை, கிரிமெற்றிதென்ன பிரதேசத்தில் அமைந்துள்ள பீங்கான் ஓட்டுத் தொழில்சாலை சுமார் ஒரு வருட காலமாக மூடப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) மேற்படி தொழில்சாலை பிரதேசத்தைச் சேர்ந்த பெரும் எண்ணிக்கையான இளைஞர், யுவதிகளுக்கு தொழில் வாய்ப்புகளை வழங்கியிருந்தது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி நிறுவனத்தை மூடுவதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி நிறுவனத்தை மூடும் போது அதில் சேவையாற்றிய அலுவலர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு நட்டஈடு செலுத்தப்பட்டதா என்பதையும்;

(iii) இன்றேல், அதற்குக் காரணமாயமைந்த விடயங்கள் யாவை என்பதையும்;

(iv) பிரதேச மக்களினதும், நாட்டினதும் பொருளாதாரத்தை வலுவூட்டுவதற்காக மேற்படி தொழில்சாலை மீண்டும் ஆரம்பிக்கப்படுமா என்பதையும்;

(v) அவ்வாறாயின், அதற்கென திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2012 மே 23, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1735/ '11

கௌரவ அனுர திஸாநாயக்க,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2011ஆம் கல்வி ஆண்டுக்காக பல்கலைக்கழகங்களுக்கு இணைத்துக் கொள்ளப்பட்ட வெளிநாட்டு மாணவர்களுடைய எண்ணிக்கை ஒவ்வொரு பல்கலைக்கழகம் மற்றும் ஒவ்வொரு பாடநெறிக்கமைய வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) ஒவ்வொரு பீடத்திற்குமாக இணைத்துக்கொள்ளப்பட்ட மேற்படி மாணவர் எண்ணிக்கையானது 2011ஆம் கல்வி ஆண்டுக்காக அந்தந்தப் பீடங்களுக்கு இணைத்துக்கொள்ளப்பட்ட மொத்த மாணவர் எண்ணிக்கையில் எத்தனை சதவீதம் என்பதையும்;

(iii) மேற்படி வெளிநாட்டு மாணவர்கள் எந்த நாடுகளைச் சேர்ந்தவர்கள் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) வெளிநாட்டு மாணவர்கள் பதிவுசெய்யப்பட்டுள்ள ஒவ்வொரு பாடநெறிக்காகவும் அறவிடப்பட்ட கட்டணங்கள் யாவை என்பதையும்;

(ii) அதனூடாக அந்தந்தப் பல்கலைக்கழகங்களுக்குக் கிடைத்த வருமானம் யாதென்பதையும்;

(iii) அந்தப் பணம் எப்பணிகளுக்காக செலவிடப்பட்டுள்ளது என்பதையும்;

(iv) குறித்த பணம் அரசின் திரண்ட நிதியத்திற்கு வழங்கப்பட்டதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1996/ '11

கௌரவ அஜித் பி. பெரேரா,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கைக்கே உரித்தான மலர்ச்செடி வகைகளின் எண்ணிக்கை யாது;

(ii) அவற்றில் சிங்கராஜ உலக மரபுரிமை வனப் பரப்பில் காணக்கூடிய மலர்ச்செடி வகைகளின் எண்ணிக்கை யாது;

(iii) இலங்கைக்கே உரித்தான தாவர வகைகளின் எண்ணிக்கை யாது;

(iv) அதில், சிங்கராஜ உலக மரபுரிமை வனப் பரப்பில் காணக்கூடிய தாவர வகைகளின் எண்ணிக்கை யாது;

(v) சிங்கராஜ உலக மரபுரிமை வனப் பரப்பில் காணக்கூடிய இலங்கைக்கே உரித்தான விலங்கினங்களின் எண்ணிக்கை யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) சிங்கராஜ உலக மரபுரிமை வன பாதுகாப்புப் பிரதேசத்திற்கு சுவீகரிப்பதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ள வனப் பிரதேசத்தின் ஊடாக, இலும்பகந்தையிலிருந்து சூரியகந்தைக்கு புதியதொரு பாதை நிர்மாணிக்கப்பட்டுள்ளதென்பதை அறிவாரா;

(ii) மேற்படி பாதையின் நீளம் யாது;

(iii) மேற்படி பாதை நிர்மாணிக்கப்பட்டமையால் சிங்கராஜ வன பாதுகாப்புப் பிரதேசத்தின் தாவர மற்றும் விலங்கினங்களுக்கு பாதகமான தாக்கம் ஏற்படுமென்பதை ஏற்றுக்கொள்வாரா;

(iv) மேற்படி பாதை நிர்மாணிக்கப்படுவதைத் தடுப்பதற்காக தற்போது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

(v) மேற்படி பாதை நிர்மாணிக்கப்படுவதால், தற்போது ஏற்பட்டுள்ள சேதத்தினை குறைப்பதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2100/ '11

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2009 ஆம் ஆண்டில் இறக்குமதி செய்யப்பட்ட மருந்துகள் மற்றும் சத்திர சிகிச்சை உபகரணங்களுக்காக துறைமுகத்திற்குச் செலுத்தப்பட்ட தாமதக் கட்டணத் தொகை மற்றும் செலுத்தப்பட்ட தரப்பு யாதென்பதையும்;

(ii) 2006, 2007, 2008 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் மேற்படி இறக்குமதிகளுடன் தொடர்புடையதாக அரச மருந்தகக் கூட்டுத்தானம் செலுத்தியுள்ள தாமதக் கட்டணங்கள் தனித்தனியாக யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2008 ஆம் ஆண்டு இனங்காணப்பட்ட பழுதடைந்த , காலாவதியான மற்றும் தரத்தில் குறைந்த மருந்துகளின் பெறுமதி எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி தரத்தில் குறைந்த மருந்து வழங்குநர்களிடமிருந்து அறவிடப்படவேண்டியுள்ள பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி பணத் தொகை அறவிடப்படாமைக்கான காரணம் யாதென்பதையும்;

(iv) 2008 ஆம் ஆண்டு கொள்வனவு செய்யப்பட்ட மருந்துகள் தரத்தில் குறைந்தவையென வெளிப்படுத்தப்பட்ட போதிலும் கேள்விப்பத்திரச் சபையானது மீளக் கொள்வனவு செய்கின்றபோது இதனைக் கவனத்திற்கொள்ளாமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) சபியுரொக்ஷிம் சோடியம் (Cefuroxime Sodium) 750 மில்லிகிராம் 250,000 அலகு தடுப்பூசி மருந்துகள், 2009 ஆம் ஆண்டு ஆய்வுகூட பரிசோதனையின்றி கொள்வனவு செய்யப்பட்ட கட்டுத்துணி மற்றும் உரிய நிறையின்றி அமொக்சிலின் நுண்ணுயிர்கொல்லி வில்லைகள் 250 மில்லிகிராம் 6783 அலகுகள் ஆகியவற்றை மருந்தகக் கூட்டுத்தானம் கொள்வனவு செய்த வேளையில் ஏற்பட்ட நட்டம் யாதென்பதை தனித்தனியாக அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2157/ '11

கௌரவ ரீ. ரன்ஜித் த சொய்சா,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இரத்தினபுரி மாவட்டத்தின் வெலிகெபொல பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள ரன்வல அரசாங்க வைத்தியசாலை மூடப்படும் அச்சுறுத்தலை எதிர்நோக்கியுள்ளது என்பதையும்;

(ii) மேற்படி வைத்தியசாலையில் மருத்துவர்கள் மற்றும் ஏனைய பதவியணியின் அலுவலர்களுக்கான பற்றாக்குறை நிலவுகின்றது என்பதையும்;

(iii) தற்போது அங்கு ஒரு மருத்துவர் மாத்திரமே சேவையாற்றுகிறார் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வைத்தியசாலையில் தங்கியிருந்து மற்றும் வெளிவாரியாக சிகிச்கை பெறுகின்ற தற்போதைய நோயாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி வைத்தியசாலைக்கு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவர்கள் மற்றும் பதவியணியினரின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iii) ரன்வல அரச வைத்தியசாலை இந்நிலைமைக்கு உள்ளாவதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி வைத்தியசாலைக்குத் தேவையான மருத்துவர்கள் மற்றும் பதவியணியினரை துரிதமாக பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

(v) அவ்வாறாயின், அதற்கு எடுக்கும் காலம் எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2262/ '12

கௌரவ அக்கில விராஜ் காரியவசம்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2011ஆம் ஆண்டின் இறுதியளவில் இலங்கையில் அறியவந்திருந்த இருதய நோயாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இருதய சத்திர சிகிச்சைகள் மேற்கொள்ளப்படும் அரச மருத்துவ மனைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அந்த மருத்துவ மனைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி வைத்தியசாலைகளில் இருதய சத்திர சிகிச்சையை செய்துகொள்ளும் பொருட்டு காத்திருப்போர் பட்டியலிலுள்ள நோயாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி நோயாளர்கள் காத்திருப்போர் பட்டியலில் இடம்பெற்றுள்ள ஆண்டுகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2267/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாந்தோட்டை விளையாட்டுத்துறைக் கிராமத்தை அமைப்பதற்காக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் பிரதேசம் யாது;

(ii) மேற்படி விளையாட்டுத்துறைக் கிராம கருத்திட்டத்தை செயற்படுத்துவதன் காரணமாக இடம்பெயரும் குடும்பங்களின் எண்ணிக்கை, இழக்க நேரிடும் வாவிகளின் எண்ணிக்கை மற்றும் வயற்காணிகளின் அளவு யாது;

(iii) இடம்பெயரும் விவசாயக் குடும்பங்கள் தொடர்பில் எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

## 2012 மே 24, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1448/ '11

கௌரவ அஜித் குமார,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) சனாதிபதி அவர்களின் கீழ் தற்போது சேவையாற்றுகின்ற ஆலோசகர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) இவர்களின் பெயர்கள், கல்வித் தகைமைகள் மற்றும் பொறுப்புகள் யாவையென்பதையும்;

(iii) இவர்களுக்கு செலுத்தப்படும் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் யாவையென்பதையும்;

(iv) கடந்த மாதத்திற்காக செலுத்தப்பட்ட அனைத்து கொடுப்பனவுகளினதும் கூட்டுத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ வாகனங்கள் வழங்கப்பட்டுள்ள ஆலோசகர்களின் பெயர்கள், வழங்கப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் விபரங்கள் யாவையென்பதையும்;

(ii) இவர்களுக்கு எரிபொருள் கொடுப்பனவு வழங்கப்படும் எனின், ஒவ்வொரு ஆலோசகருக்கும் வழங்கப்படுகின்ற எரிபொருள் கொடுப்பனவு தனித்தனியாக யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இவர்களுக்கு தொலைபேசி வசதிகள் வழங்கப்படுமெனின், தற்போது தொலைபேசி வசதிகள் வழங்கப்பட்டுள்ள ஆலோசகர்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(ii) தொலைபேசிக் கொடுப்பனவுத் தொகையொன்று வழங்கப்படுமெனின் ஒவ்வொரு ஆலோசகருக்கும் வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவுத் தொகை தனித்தனியாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1997/ '11

கௌரவ அஜித் பி. பெரேரா,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2004.07.22ஆம் திகதிய PS/CS/26/2004 ஆம் இலக்க அமைச்சரவை நிருபத்தின் பிரகாரம், சிங்கராஜ உலக மரபுரிமை வனப் பரப்புக்கு இணைந்ததாக அதிலிருந்து ½ கிலோ மீற்றர் தூரத்தினுள் அமைந்துள்ள, காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு சொந்தமான அனைத்து வனங்களையும், 1972ஆம் ஆண்டின் காணி சீர்திருத்தச் சட்டத்தின் 22(1) (ஊ) மற்றும் 44(ஐ) வாசகத்தின் பிரகாரம், வன பாதுகாப்புத் திணைக்களத்துக்கு ஒப்படைப்பதற்கு விதந்துரைக்கப்பட்டுள்ளதா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிடப்பட்ட அமைச்சரவை நிருபத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா?

(ii) குறிப்பிட்ட அமைச்சரவைப் பத்திரத்தின் பிரகாரம் 2508.4 ஹெக்டெயார் வனப் பிரதேசத்தை புதிதாக சிங்கராஜ வனத்திற்கு சேர்ப்பதற்கு உத்தேசமாயுள்ளதா

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2101/ '11

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்திற்கு முதலாவது மாணவர் குழு சேர்த்துக்கொள்ளப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) மேற்படி மாணவர் குழு தமது பட்டத்தைப் பூர்த்தி செய்ய வேண்டிய திகதி யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி மருத்துவ பீடத்தின் இறுதியாண்டு மாணவர்களுக்கு அத்தியாவசியமான பேராசிரியர் அலகு தாபிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அத் திகதி யாதென்பதையும்;

(iii) முதலாவது பேராசிரியர் பிணி ஆய்வுப் பயிற்சி இம்மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ள திகதி யாதென்பதையும்;

(iv) மேற்படி பேராசிரியர் பிணி ஆய்வுப் பயிற்சிக்குத் தேவையான கட்டிடத்தின் நிர்மாணப்பணிகள் முடிவடைந்துள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், முடிவடைந்த திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) பேராசிரியர் பிணி ஆய்வுப் பிரிவுக்குத் தேவையான தாதிகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) தற்போது சுகாதார அமைச்சினால் மேற்படி அலகிற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ள தாதிமார்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2268/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கமநல சேவைகள் திணைக்களத்தின் ஊடாக இலங்கையில் பராமரிக்கப்படும் நீர்ப்பாசன திட்டங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்?

(ஆ) (i) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2010 ஆம் ஆண்டு வரை நீர்ப்பாசன புனரமைப்பின் கீழ் குளங்களை பராமரிப்பதற்காக மேற்படி திணைக்களம் செலவிட்டுள்ள பணத் தொகை ஒவ்வொரு ஆண்டின் அடிப்படையில் தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(ii) இதனடிப்படையில் ஒவ்வொரு ஆண்டுக்குமாக போதியளவு பணம் செலவிடப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1468/ '11

கௌரவ அஜித் குமார,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) சுற்றாடல் அமைச்சில் தற்போது சேவையாற்றுகின்ற ஆலோசகர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) இவர்களின் பெயர்கள், கல்வித் தகைமைகள் மற்றும் பொறுப்புகள் யாவையென்பதையும்;

(iii) இவர்களுக்கு செலுத்தப்படும் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் யாவையென்பதையும்;

(iv) கடந்த மாதத்திற்காக செலுத்தப்பட்ட அனைத்து கொடுப்பனவுகளினதும் கூட்டுத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ வாகனங்கள் வழங்கப்பட்டுள்ள ஆலோசகர்களின் பெயர்கள், வழங்கப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் விபரங்கள் யாவையென்பதையும்;

(ii) இவர்களுக்கு எரிபொருள் கொடுப்பனவு வழங்கப்படும் எனின், ஒவ்வொரு ஆலோசகருக்கும் வழங்கப்படுகின்ற எரிபொருள் கொடுப்பனவு தனித்தனியாக யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இவர்களுக்கு தொலைபேசி வசதிகள் வழங்கப்படுமெனின், தற்போது தொலைபேசி வசதிகள் வழங்கப்பட்டுள்ள ஆலோசகர்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(ii) தொலைபேசிக் கொடுப்பனவுத் தொகையொன்று வழங்கப்படுமெனின் ஒவ்வொரு ஆலோசகருக்கும் வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவுத் தொகை தனித்தனியாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2004/ '11

கௌரவ அஜித் பி. பெரேரா,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2005 ஆம் ஆண்டு முதல் 2008 ஆம் ஆண்டு வரை மற்றும் 2011.01.01 முதல் 2011.09.01 வரையான காலப்பகுதியில் களுத்துறை மாவட்டத்தில் வழங்கப்பட்டுள்ள மதுபான உரிமப் பத்திரங்களின் எண்ணிக்கை வருடாந்த அடிப்படையில் தனித்தனியாக எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) 2010 ஆம் ஆண்டுக்காக களுத்துறை மாவட்டத்தில் மதுபான உரிமப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ள ஆட்களின் பெயர்கள் மற்றும் அவர்களின் முகவரிகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2012 மே 25 வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1167/ ' 11

கௌரவ அனுர திஸாநாயக்க,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—(3)

(அ) (i) 2009 ஆம் ஆண்டில் ஐ.ஓ.சீ. (IOC) எனும் இந்தியக் கம்பனிக்கு வரி விடுப்பு அடிப்படையில் 100 எரிபொருள் நிரப்பும் நிலையங்கள் வழங்கப்பட்டுள்ளனவா;

(ii) மேற்படி எரிபொருள் நிரப்பும் நிலையங்கள் அரசாங்கத்திற்கு வரி செலுத்த வேண்டுமா;

(iii) ஆமெனில், 2006, 2007, 2008 மற்றும் 2009ஆம் ஆண்டுகளில் அரசாங்கத்திற்குச் செலுத்தப்பட்ட வரியின் பெறுமதி தனித்தனியாக எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) எரிபொருள் நிரப்பும் நிலையங்களினால் செலுத்தத் தவறிய வரியை அரசாங்கத்திற்குச் செலுத்துமாறு இலங்கை முதலீட்டுச் சபை ஐ.ஓ.சீ கம்பனிக்கு அறிவித்துள்ளதா;

(ii) ஆமெனில், அத்திகதி யாது;

(iii) அக்கம்பனி வரி செலுத்த வேண்டியதில்லையென முதலீட்டுச் சபையின் தவிசாளராலேயே சம்பந்தப்பட்ட கம்பனிக்கு அறிவிக்கப்பட்டுள்ளதா;

(iv) ஆமெனில், அத்திகதி யாது;

(v) அத்தகைய அறிவித்தல் வழங்கியமைக்கான காரணம் யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) ஐ.ஓ.சீ. கம்பனி அரசாங்கத்திற்குச் செலுத்தவேண்டிய வரியைச் செலுத்த தவறியமைக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1776/ '11

கௌரவ அஜித் குமார,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) போப்பே – போத்தல பிரதேச சபைத் தலைவர் பயன்படுத்துகின்ற உத்தியோகபூர்வ வாகனத்திற்காக 2006 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை செலவிடப்பட்டுள்ள,

(i) எரிபொருள் செலவினம்;

(ii) பராமரிப்புச் செலவினம்;

(iii) சாரதிகளுக்கான சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளுக்காக செலவிடப்பட்ட பணத் தொகை

வருடாந்தம் வெவ்வேறாக எவ்வளவென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி பிரதேச சபைக்கு சொந்தமான "பொதுச் சந்தைகளின்" எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இவற்றின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) இந்த ஒவ்வொரு மக்கள் சந்தையிலிருந்தும் 2006 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை கிடைத்த வருடாந்த வருமானம் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி பிரதேச சபைக்கு சொந்தமான முன்பள்ளிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவை யாவையென்பதையும்;

(iii) பிரதேச சபை நிதியத்திலிருந்து மேற்படி முன்பள்ளிகளுக்காக 2006 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை வருடாந்தம் செலவிடப்பட்ட பணத்தொகை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) மேற்படி பிரதேச சபைக்கு சொந்தமான நூலகங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(v) அவை யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1998/ '11

கௌரவ அஜித் பி. பெரேரா,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) நிமல் புஞ்சிஹேவா என்பவர்,

(i) காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் தலைவராகப் பணிபுரிந்து சம்பளம் பெறுகிறார் என்பதையும்;

(ii) இதற்கு மேலதிகமாக இவர், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மேலதிக செயலாளர் (சட்டம்) ஆகவும் பணிபுரிந்து சம்பளம் பெறுகிறார் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) நிமல் புஞ்சிஹேவா என்பவரின் வயது 60 ஐ தாண்டியுள்ளதா;

(ii) அரசாங்கப் பதவிகள் இரண்டை ஒரே தடவையில் வகிப்பதற்கு நிமல் புஞ்சிஹேவா என்பவருக்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளதா;

(iii) இன்றேல், மேற்படி நபர் தொடர்பில் எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2027/ '11

கௌரவ சஜித் பிரேமதாச,— சிறுவர் அபிவிருத்தி மகளிர் அலுவல்கள் அமைச்சரைக் கேட்டபதற்கு,— (2)

(அ) (i) தற்போது முறைசாரா மற்றும் தவறான வழிகளில் பெண்கள் மற்றும் சிறுவர்கள் வீட்டுப் பணிகள் , சிறு பிள்ளைகளைப் பேணல், மற்றும் வீட்டுத் தோட்டப் பராமரிப்பு ஆகிய தொழில்களில் ஈடுபடுத்தப்படுவதையும்;

(ii) இவ்வாறு பணியில் ஈடுபடும் சிறுவர்கள் மற்றும் பெண்கள் பெரும்பாலும் பல்வேறு சித்திரவதைகளுக்கு உள்ளாகின்றனர் என்பதையும்

அவர் ஏற்றுக் கொள்வாரா?

(ஆ) (i) மேற்கூறியவாறு சிறுவர்கள், மற்றும் பெண்கள் சித்திரவதைகளுக்கு உள்ளாவதை ஒழிக்கும் பொருட்டும், ஊழியர்கள் மற்றும் தொழில் வழங்குனர்கள் ஆகிய இரு தரப்பினருக்கும் நன்மையாக அமையும் பொருட்டும், மேற்கூறிய தொழில்களை எதிர்பார்ப்பவர்களை பதிவு செய்யக்கூடியவாறான முறைசார்ந்த முறையியலொன்றுடன் கூடிய நிறுவனமொன்றை தாபிப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) தாபிக்கப்படும் அவ்வாறான நிறுவனமொன்றில் பதிவு செய்யப்பட்டவர் களுக்கு மாத்திரம் மேலே (அ) i இல் குறிப்பிட்டவாறான தொழில்களை முறைசார்ந்த விதத்தில் பெற்றுக் கொடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1999/ '11

கௌரவ அஜித் பி. பெரேரா,— பிரதம அமைச்சரும் புத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) காணி சீர்த்திருத்த ஆணைக்குழுவில் சேவையாற்றுகின்ற நிமல் புஞ்சிஹேவா என்பவர் மாதாந்தம் பெறும் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(ii) இவர் காணி சீர்த்திருத்த ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ வாகனமொன்றை பயன்படுத்துகின்றா என்பதையும்;

(iii) மேற்படி நபர் காணி சீர்த்திருத்த ஆணைக்குழுவில் சேவையாற்றுவதற்கு மேலதிகமாக வேறொரு அரச தொழிலிலும் ஈடுபட்டுள்ளாரென்பது காணி சீர்த்திருத்த ஆணைக்குழுவிற்கு வெளிப்படுத்தியுள்ளாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி நபர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் சேவையாற்றுதல் சார்பில் ரூபா எண்பதாயிரம் (ரூ.80,000/-) சம்பளத்தை பெறுகின்றாரென்பதையும்;

(ii) மேற்படி நபர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வாகனம் ஒன்றையும் உத்தியோகபூர்வ வாகனமாக பயன்படுத்துகின்றாரென்பதையும்

அவர் அறிவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2269/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2011 ஆம் ஆண்டில் சமுர்த்தி முத்திரைக் கொடுப்பனவுக்காக செலவிடப்பட்டுள்ள மொத்தத் தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி ஆண்டில் சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துவதற்கான மீண்டுவரும் செலவினம் எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி மீண்டுவரும் செலவினங்களுக்கு ஒப்பீட்டளவில் சமுர்த்தி முத்திரைக் கொடுப்பனவுக்கு அதிக நிதியை ஒதுக்குவது உகந்ததென்பதை ஏற்றுக் கொள்வாரா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?